# *புனித எரோணிமுஸ் (341 – 420)*

தல்மாசியா நகரைச் சேர்ந்த இவர் உரோமைக்குப் போய் இலத்தீன் கிரேக்க மொழிகளில் பயிற்சி பெற்று வக்கீல் வேலையும் பார்த்தார். உலக இன்ப சுகங்களை சிறிது காலம் தேடினார். பிரயாணம் செய்யத் தொடங்கிய பின் பக்தியுள்ளவரானார். உரோமைக்குத் திரும்பி அங்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். பின் காட்டில் வாழத்தொடங்கினார். நான்கு ஆண்டுகளாக செபித்து ஆராய்ச்சிகளும் செய்தார். இளவயதில் உரோமையில் இவர் கண்ட காட்சிகள் இவர் கண் முன் வந்து இவருக்குப் பாவச் சோதனைகளை எழுப்பின. அவற்றினின்று தப்பிக்க பொது தீர்வை நாளில் இரகசிய நினைவுகள் யாவும் வெளியாக்கப்படும் என்பதை இவர் நினைத்துப் பார்ப்பார். கல்லால் நெஞ்சை அடித்த இரத்தத்தை சுவர்களில் காணலாம். புத்திக்கு வேலை கொடுக்கும்படி எபிரேய மொழியைக் கற்கத் தொடங்கினார். அதன் பின்னரே சோதனைகள் அகன்றன.

திருப்பணிபுரிய வற்புறுத்தக் கூடாது என்ற நிபந்தனை மேல் இவர் குருப்பட்டம் பெற்றார். உரோமைக்குப் போய் தமாசுஸ் என்னும் பாப்புவின் செயலாளராக இருந்தார். மொழிகளைக் கற்கும்படி அலெக்ஸாந்திரியாவுக்குப் போனார். பின் பெத்லகேமுக்குத் திரும்பி வேதாகமத்தை மொழி பெயர்த்து, வேதாகம ஆராய்ச்சியும் நடத்தினார். அக்காலத்தில் பரவியிருந்த தப்பறையான கொள்கைகளை எதிர்த்தார். இவரது பெயர், கீர்த்தி எங்கும் பரவியது. பல திசைகளிலிருந்தும் இவரைக் கலந்து ஆலோசிக்க மக்கள் வந்தனர். ஒரு முறை ஒரு சிங்கம் நொண்டி நொண்டி வந்தது. மிகுந்த வேதனைப்பட்டதாகக் காணப்பட்டது. தன் பாதத்தை அவர் முன் நீட்டியது. ஆழமாக இறங்கியிருந்த முள்ளை இவர் எடுத்துக் காயத்தைக் கட்டி குணப்படுத்தினார். நன்றியுள்ள அந்த மிருகம் அதன் பிறகு எப்பொழுதும் அவருடன் இருந்ததாகவும் அவரை கல்லறையில் வைத்த போது அது கர்ஜித்து அழுததாகவும் சொல்லப்படுகிறது. இவர் 420-ஆம் ஆண்டில் இறந்தார்.

**சிந்தனை:**

“செபித்து, பின் வேதாகமத்தை படிக்கத் தொடங்கு. அதைப் படித்த பின் செபி. வேதாகமத்தை அறியாதவன் கிறிஸ்துநாதரை அறிவதில்லை. எப்பொழுதும் ஏதாவது செய்து கொண்டிரு. கடவுள் உன்னைப் பார்க்க வந்தாலும் சரி, சாத்தான் வந்தாலும் சரி நீ சோம்பேறியாய் இருக்கக்கூடாது”. (புனித எரோணிமுஸ்)

**செபம்:**

ஆண்டவரே, நாங்கள் கண் பார்வையும், சரி நினைவையும் அடக்கும் வரம் தாரும்.